செய்தி வெளியீடு எண்: 478 நாள் : 02.10.2015

## ஒப்பந்த பணிகளில் மதிப்புக் கூட்டு (TNVAT) வரியை பிடித்தம் செய்து (TDS) வணிகவரி அலுவலகத்தில் உடனடியாக செலுத்த வேண்டும்

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006, பிரிவு 13–ன் படி கட்டிடக்கட்டுமானம் மற்றும் கட்டிடப்பராமரிப்புப் பணிகளெனில் 2 சதவிகித வரியும், கட்டிடக்கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் அல்லாத ஏனைய பணிகளெனில் 5 சதவிகித வரியும், பணி வழங்குகின்ற தனி நபரோ அல்லது நிறுவனமோ ஒப்பந்தப்பணிதாரர்களுக்கு பணப்பட்டுவாடா செய்யும் பொழுது வரிபிடித்தம் செய்து அதற்கு அடுத்த மாதம் 20–ம் தேதிக்குள் வணிகவரி அலுவலகத்தில் செலுத்த வேண்டும். கட்டுமானப் பணிகள் என்பது புதிய கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் போன்றவற்றினை நிறுவுதல் மற்றும் அவற்றினைப் பராமரித்தல் போன்ற பணிகளை உள்ளடக்கியதாகும். ஏனைய பணிகளென்பது கட்டிட உள்ளமைப்புகளை மேம்படுத்துதல், மின்சாரம் சார்ந்த பணிகள், இயந்திரங்கள் போன்றவை பராமரித்தல் ஆகியன கட்டுமானப் பணிகள் அல்லாத இதர பணிகளாகும். ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் மேல் பணித்தொகை வழங்கும்பொழுது ஒப்பந்தப் பணிகளின் தன்மைக்கேற்றவாறு வரி பிடித்தம் செய்ய வேண்டும்.

கட்டுமானப் பணி வழங்கும் தனி நபர்கள் மத்திய மற்றும் மாநில அரசின் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், சங்கங்கள், தனியார் கூட்டமைப்புகள் ஒப்பந்தப் பணிகளின் தன்மைக்கேற்றவாறு மேற்கூறிய விகிதாச்சாரங்களில் வரி பிடித்தம் செய்து தொடர்புடைய வணிகவரி சரக அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

மேற்கூறியவாறு வரிபிடித்தம் செய்து செலுத்த வேண்டிய தனி நபரோ அல்லது நிறுவனமோ தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின் கீழ் பதிவுப் பெறவில்லையெனில், அவர்கள் பிடித்தம் செய்த வரியினை அவர்கள் வசிக்கும் இடம் அல்லது வாணிக தலைமையிடம் எந்த ஒரு வணிகவரி சரக எல்லைக்குட்பட்டதோ அச்சரக அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

சென்னை கோட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒப்பந்தப் பணி நிமித்தம் வரிபிடித்தம் செய்து செலுத்துவோர் கிரீம்ஸ் சாலை, வணிகவரி கட்டிடத்தில் அமைந்துள்ள மூலவரி செலுத்தும் சரக (TDS Circle) அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

எந்த ஒரு தனி நபரோ அல்லது நிறுவனமோ மேற்கூறியவாறு ஒப்பந்தப்பணிகள் நிமித்தம் பிடித்தம் செய்து செலுத்த வேண்டிய வரியினை அவ்விதம் பிடித்தம் செய்து செலுத்த தவற நேரின், பிடித்தம் செய்யப்பட வேண்டிய வரித் தொகையுடன், 150 சதவிகித தண்டமும் அதன் மீது ஒரு மாதத்திற்கு 2 சதவிகித வட்டியுடன் செலுத்த நேரிடும்.

ஒப்பந்தங்களுக்கான வரி விதிப்பு முறை குறித்து விரிவாக தமிழ் நாடு வணிகவரித் துறை இணைய தளத்தில் https://www.tnvat.gov.in. தகவல்கள் உள்ளன. மேலும், சந்தேகங்கள் ஏதேனும் இருப்பின் மின் அஞ்சல் cct@ctd.tn.gov.in மூலம் அல்லது கட்டணமில்லா தொலைபேசி : 1800 103 6751 மூலமாகவோ தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

கட்டுமான பணி வழங்கும் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மதிப்புக் கூட்டு வரியினை பிடித்தம் செய்து உடனுக்குடன் செலுத்தி தமிழ்நாடு அரசின் மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்திட முழு ஒத்துழைப்பினை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**